**செய்தி வெளியீடு எண்: 472** **நாள்: 07.08.2019**

**ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் முப்பதாம் ஆண்டு விழா மற்றும் வளங்குன்றா வளர்ச்சிக்கான குறிக்கோள்களை அடைவதற்கும், பருவநிலை மீட்சிக்கான அறிவியலைப் பலப்படுத்துவதற்குமான கருத்தரங்க துவக்க விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை – 07.08.2019**

**மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.**

**டாக்டர். எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் 30–ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில்** பங்கு கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அறக்கட்டளையின் சொந்தக் கட்டடம் மாண்புமிகு அம்மா அவர்களால் **1993**–ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இனிய விழாவில்

மிகச் சிறப்பாக உரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

வாழ்த்துரை வழங்கிய கஸ்தூரி அன் சன்ஸ் தலைவர்
**திரு. என்.ராம் அவர்களே!**

தலைமை உரையாற்றிய நிறுவனர்
பேராசிரியர் **முனைவர் எம்.எஸ்.சுவாமிநாதன்** அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள உலக சுகாதார நிறுவனத்தின்
துணை பொது இயக்குநர் மற்றும் தலைமை விஞ்ஞானி
மருத்துவர் **சௌமியா சுவாமிநாதன்** அவர்களே !

வரவேற்புரை ஆற்றிய இந்நிறுவனத்தின் தலைவர்
முனைவர் **மதுரா சுவாமிநாதன்** அவர்களே!

இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்

முனைவர் **ந.அனில் குமார்** அவர்களே !

அறக்கட்டளை நிர்வாகிகளே!
நண்பர்களே, விஞ்ஞான பெருமக்களே !
ஊடக மற்றும் பத்திரிகைத் துறை நண்பர்களே!
பெரியோர்களே, தாய்மார்களே !

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

**“விடா முயற்சியை கடல் அலைகளிடமும்,**
**கடமை தவறாமையை கதிவரனிடமும்,**
**உத்வேகத்தை காட்டாற்றிடமும்,**
**புன்சிரிப்பை பூக்களிடமும்,**
**சுறுசுறுப்பை எறும்புகளிடமும்,**
**சேமிப்பை தேனீக்களிடமும்,**
**பொறுமையை பூமியிடமும்,**
**கருணையை கடவுளிடமும் கற்றுக்கொள்”**

என்பது ஆன்றோர் வாக்கு. இதில் கூறப்பட்ட குணநலன்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்றவர் மரியாதைக்குரிய டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. ‘முடியாது’ என்ற எண்ணம் தன் வாழ்க்கையிலே கிடையாது என்ற நோக்கத்தின் அடிப்படையில் தனது 92 வயதிலேயும், ஒரு இளைஞனைப் போல் இன்றும் பணியாற்றிக் கொண்டிருப்பது நம்மையெல்லாம் வியக்க வைக்கிறன்றது. இவர் இந்தியாவிலும், உலக அளவிலும் புகழ் பெற்ற ஆய்வு நிலையங்களில் பேராசிரியர், ஆராய்ச்சி நிர்வாகி, தலைவர் ஆகிய பதவிகளை வகித்தவர். மத்திய வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறை செயலாளர், மத்திய திட்டக்குழு உறுப்பினர் போன்ற உயர் பதவிகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய உலகம் போற்றும் ஒரு விவசாய விஞ்ஞானியாக திகழும் இவர், நமது தமிழ்நாட்டைச் சார்ந்தவர் என்பதில் நாம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

1942–ஆம் ஆண்டு வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சம் இவரை பாதித்ததன் காரணமாக, இந்திய போலீஸ் பணித் துறையில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், அந்த பணியில் சேராமல், இந்தியாவில் விவசாயப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து, உணவு உற்பத்தியில் நம் நாடு தன்னிறைவு பெற தனது வாழ்நாளை வேளாண்மை முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்தவர்.

இவர் மேலை நாடுகளில் வேளாண்மைத் துறையில் படித்து முனைவர் பட்டம் பெற்றாலும், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதில் தனது தாய்நாடு பின்தங்கி இருப்பதை அறிந்து, இந்தியாவிற்குத் திரும்பினார். இவரது இடைவிடாத ஆராய்ச்சி மற்றும் நடவடிக்கைகளின் காரணமாக, கோதுமை மற்றும் அரிசியில் உயர் விளைச்சல் பயிர் ரகங்கள் கண்டறியப்பட்டன. இந்தப் பயிர் ரகங்கள் பயன்படுத்துவது பற்றிய விளக்கங்களை இவரே நேரடியாக விவசாய பெருமக்களிடம் சென்று எடுத்துரைத்துள்ளார். இந்த அதிக மகசூல் தரும் பயிர் ரகங்களை விவசாயிகள் உற்பத்தி செய்ததன் காரணமாக, உணவுப் பொருள் உற்பத்தியில் பின்தங்கி இருந்த நமது நாடு, உணவு தன்னிறைவு பெற்று ஒரு **பசுமைப் புரட்சியை** ஏற்படுத்தியது. வெளிநாட்டிலிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்த நிலைமை முற்றிலும் மாறி, தன்னிறைவு நிலையை இந்தியா அடைந்ததன் காரணமாகத் தான் இவர் பசுமைப் புரட்சியின் தந்தை என்றும் அழைக்கப்படுகிறார்.

**“செயற்கரிய செய்வார் பெரியர்”, அதாவது எல்லோராலும் செய்ய இயலாத செயலைச் செய்பவர்தான் பெரியர் என்றார் வள்ளுவர் பெருந்தகை.** அந்த கையில், வேளாண்மைத் துறையில் இவர் நிகழ்த்திய சாதனையை கௌரவிக்கும் வகையில், இவருக்குக் கொடுத்த பரிசுத் தொகையை கொண்டு இந்த

ஆராய்ச்சிக் கட்டளையை இவர் தொடங்கினார். இலாப நோக்கமற்ற இந்த தொண்டு நிறுவனம், கிராமப்புறங்களில் உள்ள ஏழை பெண்களை இலக்காகக் கொண்டு, அவர்களின் நேரடி வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான உத்திகளை உருவாக்குகிறது. இத்தொண்டு நிறுவனத்தின் விஞ்ஞானத் தொழில்நுட்ப பயன்பாடு சுற்றுச்சூழல் நிலைத் தன்மை மற்றும் சமூக அபிவிருத்திக்கு பெரிதும் பயன்படுகிறது.

இந்த நிறுவனத்தின் மூலம் ஒரு லட்சத்து 62 ஆயிரம் ஹெக்டேர் நிலங்கள் வளப்படுத்தப்பட்டுள்ளன. சதுப்பு நில காடுகள் மீட்கப்பட்டுள்ளன. 4,000 சத்துணவு பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கீழ்மட்ட அளவில் வேளாண்மை பணிகளை செய்ய நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது போன்ற எண்ணற்ற வேளாண் சம்பந்தப்பட்ட பணிகளை 30 ஆண்டுகளாக இந்த நிறுவனம் செய்து வருவது மிகவும் பாராட்டுக்குரியது.

வேளாண் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு படைத்துள்ள சில சாதனைகளை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாம் பசுமை புரட்சியை தமிழ்நாட்டில் ஏற்படுத்திட முனைப்புடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, வேளாண் உற்பத்தியை இருமடங்காக்கி விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக்கிடும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

திருந்திய நெல் சாகுபடி முறை, நேரடி நெல் விதைப்பு, தீவிர பயறு சாகுபடி, ஊட்டச்சத்து மிக்க சிறுதானிய சாகுபடி முறைகள், ஒருங்கிணைந்த பண்ணையம், கூட்டுப் பண்ணையத் திட்டம், நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம் மற்றும் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம் பாசன

நீர் மேலாண்மை செய்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதன் விளைவாக கடந்த எட்டு ஆண்டுகளில் ஆறாவது முறையாக தமிழ்நாடு 100 லட்சம் மெட்ரிக் டன்னிற்கும் அதிகமாக உணவு உற்பத்தி செய்து சாதனை புரிந்துள்ளது என்பதை பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறேன். இதே போல் பல சாதனைகளை செய்த தமிழ்நாடு அரசை கௌரவிக்கும் வகையில் மத்திய அரசின் உயரிய விருதான **'கிருஷி கர்மான் விருதை' தமிழ்நாடு அரசு கடந்த 8 ஆண்டுகளில் 4 முறை பெற்றுள்ளது என்பதை பெருமிதத்துடன் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.**

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் 30வது ஆண்டு விழாவில் பல்வேறு தலைப்புகளில் நடைபெற உள்ள கருத்தரங்கங்கள் வெற்றி அடைய எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிறுவனம் இன்னும் மேன்மேலும் வளர்ந்து, வேளாண்மைத் துறையில் பல்வேறு யுக்திகளை கண்டறிந்து, அதனை விவசாய பெருமக்களிடம் கொண்டு சென்று, அதன் மூலம் நாட்டின் வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதில் பெரும் பங்காற்ற வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டில் தண்ணீர் பிரச்சனை மிக முக்கியமாக கருதப்படுகிறது. காரணம், பருவ மழை காலங்களில் அண்டை மாநிலங்களில் உற்பத்தியாகின்ற ஆறுகளிலிருந்து கிடைக்கின்ற நீரை வைத்துத் தான் வேளாண்மை மேற்கொள்ளப்படுகின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. சில வருடங்களில் பருவ மழை பொய்த்து விடுகின்றது. இந்த ஆண்டும் பருவமழை பொய்த்து விட்டது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிடைக்கின்ற தண்ணீரை சேமிப்பது மிக முக்கியமாகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு நீர் மேலாண்மை திட்டத்தினை உருவாக்கி, அதன் மூலம் பருவ காலங்களில் கிடைக்கின்ற நீரை சேமிக்க வேண்டி, குடிமராமத்துப் பணிகள் மூலம் ஏரி, குளங்கள் தூர்வாரப்பட்டு சீர் செய்யப்படுகின்றது. அதேபோல, பருவ காலங்களில்

பொழிகின்ற மழை நீர், ஓடை, நதிகளின் குறுக்கே தடுப்பணைகளை கட்டி தேக்கப்படுகிறது. இதனால் ஒரு சொட்டு நீர்கூட வீணாகாமல் ஏரிகள், குளங்கள் மூலம், தடுப்பணைகள் மூலம் நீர் சேமிக்கப்படுகிறது. இதனால், விவசாயப் பெருமக்களுக்கு தேவையான நீர் கிடைக்கின்றது. குடிப்பதற்குத் தேவையான நீர் கிடைக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மரியாதைக்குரிய திரு. ராம் அவர்கள் குறிப்பிடுகின்றபொழுது, இந்த Lease period முடிவடைந்து விட்டது, நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். ஏற்கனவே இந்த நிறுவனம் Lease period முடிவடைவதற்கு முன்பாகவே விண்ணப்பித்திருக்கின்றது. அது அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. விரைவாக அந்தப் பணி நிறைவு பெற்று Lease period நீட்டித்துக் கொடுக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

******